Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 7, 2022

வியாழக்கிழமை ஏப்ரல் 07, 2022 | ஒளி: 07 கதிர்: 276 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# ஜனாதிபதி ஒருபோதும் பதவி விலகமாட்டார்



## சபையில் அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

*பா.நிரோஸ்*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஒருபோதும் பதவி விலகப் போவதில்லை என்று தெரிவித்த அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜனாதிபதிக்கு 69 இலட்சம் பேர் வாக்களித்துள்ளனர் என்றும் பாராளுமன்றத்தில் நேற்று (06) தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி விலகினால் மீதமுள்ள காலத்துக்கு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியை நியமிக்க முடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்‌ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## "பாரிய உணவு பஞ்சம் ஏற்படும்"

### சபைக்கு அறிவித்தார் சபாநாயகர்

*பா.நிரோஸ்*

பொருளாதார நெருக்கடிக்கான ஆரம்ப நிலையில் நாடு இருப்பதாகத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இதனால் நாட்டில் பாரிய உணவு தட்டுப்பாடு ஏற்படப்போவதாக எச்சரிக்கப்பட்டுள்ளதாக சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2



## அரசாங்கத்துக்கு எதிராக அடையாள வேலைநிறுத்தம்

### சுகாதார தொழிற்சங்கம் அறிவிப்பு

அரசாங்கத்துக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை (08) இரண்டு மணி நேர அடையாள வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் அறிவித்துள்ளது.

நேற்று (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## நாடெங்கும் பற்றி எரியும் எதிர்ப்பு

- சுகாதார அவசர நிலை பிரகடனம்
- வைத்தியர்களும் போராட்டம்
- வங்கி, மின்சார ஊழியர்களும் வீதிக்கு இறங்கினர்

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் நேற்றும் (06) முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்தும் மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை வழங்குமாறு கோரி சுகாதாரத் தரப்பினரால் நாட்டிலுள்ள பல வைத்தியசாலைகளில் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், நேற்று முன்தினம் (05) சுகாதார அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளதுடன், நேற்றையதினம் (06) நடத்தப்பட்ட போராட்டத்தால், கொழும்பு நகர மண்டப பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தொடர்ச்சி P2



## தங்கம் சற்று சரிந்தது

நாட்டில் தங்க விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் கூறியுள்ளது.
செட்டியார் தெருவின் இன்றைய நிலைவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 190,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று, 175, 000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.
கடந்த வாரத்தில் 24 கரட் தங்கம், பவுண் ஒன்று 200,000 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## நிசங்கவை அடுத்து நிரூபமா ராஜபக்‌ஷ

### நாட்டை விட்டு டுபாய் பறந்தார்

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி நேற்றுமுன்தினம் (05) அதிகாலை டுபாய் நோக்கிப் புறப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்‌ஷ, கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக டுபாய் நோக்கி பயணித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.


தொடர்ச்சி P2



## இலங்கை மீது ஐ.நா கழுகுப் பார்வை

இலங்கை நிலைவரத்தை தாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம், பதற்றங்களை அமைதியான முறையில் தணிக்குமாறு இலங்கை அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## அமெரிக்க டொலருக்கான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

இலங்கை மத்திய வங்கி நேற்று (06) வெளியிட்ட வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலருக்கான ரூபாயின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அமெரிக்க டொலரின் விற்பனை விலை நேற்றுமுன்தினம் (05) 300 ரூபாயைத் தாண்டியிருந்த நிலையில் நேற்றையதினம், அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 298 ரூபாய் 10 சதமாகவும் விற்பனை விலை 308 ரூபாய் 49 சதமாகவும் உயர்ந்தது.

தொடர்ச்சி P2

## முந்தியது தலவாக்கலை

தமிழ் முற்போக்குக் கூட்டணியினால் தலவாக்கலை இன்று (07) எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான இந்தப் போட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று, தலவாக்கலையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பி.திகாம்பரம், வே.இராதாகிருஸ்ணன் தலைமையிலான கட்சி அங்கத்தவர்களும் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கலந்துகொள்ளவுள்ளார்.

மன்னார் மனிதப் புதைகுழி

## இருவருக்கு அழைப்பாணை

மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரிக்கும் பேராசிரியர் ராஜ் சோமதேவவுக்கும் அழைப்பாணை பிறப்பிக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். ஹிபதுல்லா, நேற்று (06) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



ரஞ்சித் சியம்பலாபிட்டியவின்

## இராஜினாமா கடிதத்தை நிராகரித்தார் ஜனாதிபதி



பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்வதற்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்த கடிதத்தை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ நிராகரித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு, நேற்று (06) தெரிவித்துள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படுவதற்கும் அவர்கள் வகித்த பதவிகளை இராஜினாமா செய்வதற்கும் தீர்மானித்திருந்தனர்.

பாராளுமன்ற ஜனநாயகம் பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2

## பாடசாலைகளுக்கு நேற்று முதல் விடுமுறை

### 1 மணித்தியாலத்தால் பாடசாலை நேரம் நீடிப்பு

நாடளாவிய ரீதியிலுள்ள அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகள் அனைத்துக்கும் நேற்று (06) முதல், தவணை விடுமுறை வழங்கப்படுவதாக அறிவித்துள்ள கல்வியமைச்சு, அடுத்த தவணை எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




## கைவசம் உள்ள மருந்து 3 வாரங்களுக்கே போதும்

### அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

வைத்தியசாலைகளில் உள்ள மருந்து கையிருப்பு இன்னும் மூன்று வாரங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வடமேல் இணைப்பாளர் டொக்டர் இந்திக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், மருத்துவ துறையில், குறிப்பாக மருந்துகளை பெறுவற்கு டொலர்களின் தட்டுப்பாடு பல சிக்கல்களுக்கு வழிவகுத்துள்ளதாக கூறினார்.

தற்போது கிடைக்கும் மருந்து கையிருப்பு குறைவாக இருப்பதாகவும், எதிர்காலத்துக்கான மருந்துகளை சேமித்து வைப்பதை தாங்கள் காணவில்லை என்றும் குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 'பாரிய உணவு பஞ்சம் ஏற்படும்'

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வை ஆரம்பித்து வைத்து சபாநாயகரின் அறிவிப்பு விடுக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் முன்னெப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடி நிலைமை முகங்கொடுப்பதற்கான ஆரம்ப நிலையில் நாம் இருக்கிறோம். நாட்டின் பொருளாதார நிலைமைகள் மேலும் மோசமடையலாம் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

நாட்டில் தற்போது காணப்படும் எரிவாயு, எரிபொருள், மின்சாரம் ஆகிய தட்டுப்பாடுகளுக்கு அப்பால் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஒன்று ஏற்படும் எனவும் பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்" எனவும் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

எனவே, இந்த நெருக்கடி நிலைமை தவிர்ப்பதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுவார்கள் என தான் நம்புவதாகவும் சபாநாயகர் இதன்போது சபைக்கு அறிவித்தார்.

## அரசாங்கத்துக்கு எதிராக அடையாள வேலை நிறுத்தம்

பொதுமக்களின் போராட்டங்களுக்கு ஆதரவாக வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், பொதுமக்களின் துயரங்களுக்கு தொழிற்சங்கங்களின் ஒற்றுமையைக் காட்டவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு எவ்வித அசௌகரியமும் ஏற்படாது எனவும் சுகாதார சேவைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இரண்டு மணிநேர வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்றும் கூறினார்.

நாடு முழுவதுமுள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்கள் ஒன்றிணைந்து நாளை வெள்ளிக்கிழமை தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிக்காட்டும் என்றும் தெரிவித்தார்.

## அமெரிக்க டொலருக்கான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

இதேவேளை, ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்வனவு விலை 390 ரூபாய் 15 சதமாகவும், விற்பனை விலை 404 ரூபாய் 71 சதமாகவும் காணப்பட்டது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், ரூபாயை மிதக்க விடுக்கதற்கான இலங்கை மத்திய வங்கியின் தீர்மானித்ததை அடுத்து, ரூபாய்க்கு எதிரான வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி சில நாட்களாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'ஜனாதிபதி ஒருபோதும் பதவி விலகமாட்டார்'

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளதாகவும் அதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் விவாதத்தின் முடிவில் அதைத் தீர்மானிக்குமாறும் குறிப்பிட்டார்.

அப்போது எழுந்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜனாதிபதி ஒருபோதும் பதவி விலக மாட்டார் என, அரசாங்கம் என்ற வகையில் தாம் தெளிவாக கூறுவதாகவும் இதற்கு முகங்கொடுக்க தாம் தயார் எனவும் தெரிவித்ததுடன், உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

"அவசரகாலச் சட்டத்தால் மக்கள் தூக்கிச் செல்லப்பட்டு கொல்லப்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை, இந்த இளைஞர்களை தவறாக வழிநடத்தாதீர்கள்" என்ற அவர், "50,000 முதல் 75,000 வரை இறங்கி, 2 கோடி 20 இலட்சம் மக்களை அழிக்க முயல்கின்றனர். அவர்களுக்கு எதிராக எழ வேண்டும். அதற்காக நாங்கள் போராடுகிறோம்" என்றார்.

**"கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதால் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா" என பந்துல குணவர்தன எம்.பி கேள்வி எழுப்பினார்.**

அப்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான நளின் பண்டார, "அரசாங்கத்தின் கைக்கூலிகள் நடமாடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மிரிஹான சம்பவம் தொடர்பில் ஏதேனும் விசாரணைகள் நடைபெறுகின்றனவா?" என்று கேள்வியெழுப்பினார்.

"நாட்டில் ஒரு குடும்பத்தை பாதுகாக்க அவசரகாலச் சட்டம் போடப்படுகிறது. ஊரடங்குச் சட்டம் போடப்படுகிறது. இன்று எத்தனை பேர் நாட்டை விட்டு ஓடியிருக்கிறார்கள், திருடிய எவராலும் தப்பிக்க முடியாது" என்றும் நளின் எம்.பி குறிப்பிட்டார்.

இன்று (நேற்று) இடம்பெறும் விவாதத்தின் போது இந்த விடயங்களை பகிரங்கப்படுத்துமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை விடுத்தபோதும் நளின் எம்.பி தொடர்ந்தும் உரையற்றினார்.

"கோட்டாபய போகமாட்டார் என்று ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உரக்கச் சொன்னாலும் கோட்டாபய செல்லவேண்டியுள்ளது. அதுதான் உண்மை. கோட்டாபய ஆட்சியில் இருக்கும் வரை இந்த நாடு முன்னேறாது. கோட்டா இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் போதே இந்த நாட்டின் பொருளாதாரம் பின்னோக்கி சென்றுள்ளது" என்றார்.

**நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில், சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது. அந்த விவாதம் இன்றும் (07) இடம்பெறும்.**

நளின் பண்டார எம்.பி தெரிவித்த கருத்தை அடுத்து, பாராளுமன்றத்தை ஒத்திவைக்குமாறு சபாநாயகர் உத்தரவிட்டதையடுத்து, சபை ஒத்திவைக்கப்பட்டது.

சுமார் 10 நிமிடங்களுக்குப் பின்னர் சபை மீண்டும் கூடியபோது, "கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதால் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா" என பந்துல குணவர்தன எம்.பி கேள்வி எழுப்பினார். அப்போது எழுந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள், "கோட்டா கோ ஹோம்" என கோஷமிட்டதுடன், பதாகைகளை ஏந்தியவாறு தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இரண்டாவது தடவையாகவும் சபையை ஒத்திவைத்தார். சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு. நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில், சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது. அந்த விவாதம் இன்றும் (07) இடம்பெறும்.

## நிசங்கவை அடுத்து நிரூபமா ராஜபக்ஷ

எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான ஈகே 655 என்ற விமானத்தில் நேற்றுமுன்தினம் (05) இரவு 10.25 மணிக்கு அவர் புறப்பட்டதாக விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, அவரது கணவர் திருக்குமார் நடேசன் ஆகிய இருவரும் பன்டோரா பேப்பர்ஸ் என்ற பெயரில் வெளியான ஆவணங்களில் நிதிமோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

நிசங்க சேனாதிபதியின் மனைவி மற்றும் அவர்களது பிள்ளைகள் திங்கட்கிழமை (04) காலை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் மாலைதீவுக்கு சென்றிருந்துடன், நாமல் எம்.பியின் மனைவி உட்பட அவரது குடும்ப உறுப்பினர்களும் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**விமானத்தில் மாலைதீவுக்கு சென்றிருந்துடன், நாமல் எம்.பியின் மனைவி உட்பட அவரது குடும்ப உறுப்பினர்களும் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது**

## இலங்கை மீது ஐ.நா கழுகுப் பார்வை

ஜெனீவாவில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் லிஸ் த்ரோசல், நேற்று முன்தினம் (05) இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் மோசமடைந்துவரும் பொருளாதார நெருக்கடிக்கான எதிர்ப்புகளுக்கு பதிலளிக்கும் வகையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், ஏற்படும் பதற்றங்களை அமையதியான முறையில் தணிக்குமாறே அவர் தெரிவித்தார்.

இலங்கையின் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும், உணவு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு என்பன புதிய எதிர்ப்புக்களை இலங்கையர்கள் மத்தியில் தூண்டியுள்ளதாகவும் கூறினார்.

கடந்த சில மாதங்களாக பொதுமக்களின் அதிருப்தி அதிகரித்தமையால் நாடு முழுவதும் பெரும்பாலும் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. போராட்டக்காரர்கள் மீது அதிகப்படியான மற்றும் தேவையற்ற பொலிஸ் வன்முறைகள் நடந்ததாகவும் செய்திகள் வந்துள்ளன என்றார்.

இலங்கை எதிர்கொள்ளும் அழுத்தமான பொருளாதார மற்றும் அரசியல் சவால்களுக்கு தீர்வு காண்பதற்கும் நிலைமை மேலும் துருவப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும் உடனடியான மற்றும் அர்த்தமுள்ள கலந்துரையாடலில் ஈடுபடுமாறு அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்றும் குறிப்பிட்டார்.

**அர்த்தமுள்ள கலந்துரையாடலில் ஈடுபடுமாறு அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்**

## நாடெங்கும் பற்றி எரியும் எதிர்ப்பு

தமது தொழிற்சங்கங்களை கட்டுப்படுத்த சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் நடவடிக்கைக்கு எதிராக வைத்தியர்களால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்களை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் மக்கள் எதிர்ப்புக்களில் ஈடுபட்டிருந்தனர். இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க கூட்டணி நடத்திய அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இலங்கை மின்சார சபைக்கு முன்பாக இடம்பெற்றது. கொழும்பிலுள்ள மக்கள் வங்கியின் தலைமையகத்துக்கு முன்பாக வங்கி ஊழியர்கள் பலர் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## இராஜினாமா கடிதத்தை நிராகரித்தார் ஜனாதிபதி

எனவே, பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகுவதற்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்த கடிதத்தை நிராகரிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றக் குழுவின் சம்மதத்துடன், பிரதி சபாநாயகராக தாம் தொடர்ந்தும் செயற்படவுள்ளதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார் என்றும் அப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அவர்கள் மற்றும் அக்கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**மைத்திரிபால சிறிசேன அவர்கள் மற்றும் அக்கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்**

## பாடசாலைகளுக்கு நேற்று முதல் விடுமுறை

அதேவேளை, ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் பாடசாலை நேரம் ஒரு மணித்தியாலத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதலாம் தவணை தொடக்கம் டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதியுடன் பாடசாலைக்காலம் நிறைவடையவுள்ளது. அந்தக் காலப்பகுதிக்குள் பாடசாலை நேரத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அதனடிப்படையில், பாடசாலை விடுமுறைகள் உள்ளிட்ட பாடசாலை அட்டவணைகள் அதிபர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## இருவருக்கு அழைப்பாணை

நேற்றைய வழக்கு விசாரணைக்கு முன்னிலையாக முடியும் என கடந்த தவணையின் போது அவர்கள் அறிவித்த போதும் வழக்கு விசாரணைக்கு மேற்குறிப்பிட்ட இருவரும் சமூகமளிக்காமையால், அவர்களுக்கு அழைப்பாணையை பிறப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். எதிர்வரும் 27 ஆம் திகதி வழக்கின் முன்னேற்ற அறிக்கையை வவுனியா மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், வழக்கை எதிர்வரும் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.


## கைவசம் உள்ள மருந்து 3 வாரங்களுக்கே போதும்

வரவிருக்கும் பற்றாக்குறையை குறித்து பல மாதங்களுக்கு முன்னரே அதிகாரிகளிடம் சங்கம் தெரிவித்த போதிலும், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் ஏனைய மருத்துவ சேவைகளை உறுதிப்படுத்துவதற்கும் சுகாதார அமைச்சிடம் நிலவும் நிதிப் பற்றாக்குறை காரணமாக, வைத்தியசாலைகளைப் பராமரிக்க முடியாது என்று சங்கத்தின் உறுப்பினர் டொக்டர் கோசல தென்னகோன் தெரிவித்தார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் சுகாதாரத் துறையின் வீழ்ச்சிக்கு எதிராக எதிர்காலத்தில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் என்றும் தெரிவித்தார்.

## 'ஹர்சாவை ஜனாதிபதியாக்குக'



இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பட்சத்தில் ஜனாதிபதி பதவியை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்சடி சில்வாவுக்கு வழங்க வேண்டுமென அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (06) நடைபெற்ற, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர், தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொருளாதார நிபுணரான ஹர்சவால் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியும். நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பாராளுமன்ற உணவகத்தில் உணவுகளை உட்கொள்ளப்போவதில்லை எனவும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை ஒரு வருடத்துக்கு தான் பெறபோவதில்லை எனவும் தெரிவித்தார்.

இதேபோன்ற நிலைப்பாட்டை ஏனையப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் மாத்திரமே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கௌரவம் பாதுகாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## போராட்டங்களை கட்டுப்படுத்த ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

ஜனாதிபதி பதவி விலகுவதன் ஊடாக அல்லது தேர்தல் ஒன்றுக்கு தற்போது செல்வதென்கிற அறிவிப்பை விடுப்பதன் ஊடாகவே மக்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (06) நடைபெற்ற, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர், தொடர்ந்து உரையாற்றுகையில், அரசாங்கம் தங்களது கடமைகளில் இருந்து தவறிமையே நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்களுக்குக் காரணம். பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் வைத்திருப்பதன் ஊடாக எதனையும் செய்துவிடலாம் என்கிற நிலையிலேயே அரசாங்கம் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

# "நாடகத்துக்கு இடமளியோம்"



கறுப்பு ஜூலை கலவரத்துக்கும் எனது கட்சிக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, கறுப்பு ஜூலை நாடகத்துக்கு மீண்டும் இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

"என்னை பைத்தியக்காரர் என்கிறார்கள்; இரண்டு கோடி மக்கள், ஜனாதிபதியை பைத்தியக்காரன்" என்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் (நேற்றுமுன்தினம்) கலந்துகொண்டுவிட்டு செல்லும்போது எனது வாகனத்தை போராட்டக்காரர்கள் மறித்தார்கள். இதன்போது போராட்டத்தை இடைநடுவே நிறுத்த வேண்டாம். நாட்டை கொள்ளையடித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறாது, கொள்ளையடித்த பணத்தை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே நான் போராட்டக்காரர்களிடம் கூறினேன்.

நாட்டில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டும், தாக்கப்பட்டும் உள்ளனர். எனினும் இதுவரையில் குற்றவாளிகள் கைது செய்யப்படவோ தண்டனை வழங்கப்படவோ இல்லை. இச்சம்பவங்கள் நடைபெறும்போது தற்போதைய ஜனாதிபதியே பாதுகாப்புச் செயலாளராக இருந்தார் என்றார்.

எனவே எங்களது கட்சியின் சகோதரர்கள், எனக்கான பாதுகாப்பை வழங்குவார்கள். முட்டாள்தனமாக நான் கழுத்தைக் கொடுக்கப்போவதில்லை. பாராளுமன்றத்தில் இருந்து வெளியில் செல்லும்போது எனது பாதுகாப்புக்காக கட்சியின் சகோதரர்கள் வருவார்கள். அவர்களுடனேயே நான் நாளையும் செல்வேன் எனவும் இதன்போது விளக்கமளித்தார்.

இவ்வாறு எனது பாதுகாப்புக்கு வந்தவரே எனது வாகனத்தில் ஏறி என்னுடன் வந்தார். இதேவேளை கறுப்பு ஜீலைக் கலவரத்துக்கும் எமது கட்சிக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. எவ்வாறாயினும் எமது கட்சிக்கு தடை விதித்தார்கள். எனவே 1983ஆம் ஆண்டு நடைபெற்ற நாடகத்துக்கு இடமளிக்கப்போவதில்லை. தேசிய பாதுகாப்பு சபைக் குழுக் கூட்டத்தில் அவன்கார்ட் நிறுவனத் தலைவர் நிசங்க சேனாதிபதி கலந்துகொண்டுள்ளார். எவ்வாறு அவரால் கலந்துகொள்ள முடியும்?

ஜனாதிபதி தற்போது பங்கர்களில் ஒளிந்து இருக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. இராணுவத்தினரைக் கொண்டு விவசாயம் செய்வதாகக் கூறிய ஜனாதிபதி, தற்போது இராணுவப் பாதுகாப்பில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (06) சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெற்றது.

# "அட்ட பாஸ் குழுவால் குழப்பம் வரும்"



ஆயுதம் தாங்கிக்கொண்டு இராணுவ வீரர்கள், போராட்ட இடங்களுக்கு செல்வதை தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என தெரிவிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா எம்.பி, இராணுவத்தினர் எட்டாம் வகுப்பு வரையில் மாத்திரமே படித்திருப்பதால் அவர்களும் குழப்பமடைந்து அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடும் எனவும் தெரிவித்தார்.

போராட்டங்கள் இடம்பெறும்போது ஆயுதந்தாங்கிய இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களில் அந்த இடங்களுக்கு செல்வதை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. இராணுவ சீருடையில் உள்ள இராணுவத்தினரை மக்கள் மத்தியில் வைத்து பொலிஸார் தாக்குவதையும் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆயுதந்தாங்கிய இராணுவத்தினர் போராட்ட இடங்களுக்கு இவ்வாறு செல்லும்போது அந்த ஆயுதங்களை பறித்து போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தக்கூடும். எட்டாம் வகுப்பு (அட்ட பாஸ்) வரையில் மாத்திரமே கற்றிருக்கும் அவர்கள் உணர்ச்சிவசப்படக்கூடும்

இச்சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் மேற்கொண்டு, இராணுவத்தினர் மீது தவறு இருந்தால் இராணுவத்தினர் மீதும், பொலிஸார் மீது தவறிருந்தால் பொலிஸார் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# அவசரக்காலச் சட்டத்தை அமல்படுத்தியது ஏன்?



மிரிஹானயில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டங்களின் பின்னர் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களை தொடர்ந்தே நாட்டில் அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக அமைச்சர் தினேஸ் குணவர்தன விளக்களித்துள்ளார்.

எதற்காக அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமைகளால் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். காரணங்கள் ஏதுமில்லாது வெறுமனே நாட்டில் அவசர காலச் சட்டம் அமல்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் எதிர்காலத்தில் பொறுப்பை ஏற்கக்கூடிய எதிர்க்கட்சியினர் இது தொடர்பில் தெரிவிக்கும் கருத்துகள் கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக இடம்பெற்ற வன்முறை சம்பவங்களாலேயே பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்போது பல வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. இதனால் மக்களின் வாழ்க்கையை தொடர்ந்து பாதுகாப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் அமல்படுத்தப்பட்டது எனவும் கூறினார்.



# மீண்டுமொரு கலவரத்துக்கு முயற்சி

ஜே.வி.பி கலவரத்தை போல மற்றொரு கலவரத்தை நாட்டில் ஏற்படுத்த தற்போது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முயல்வதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பி கலவரத்தில் தனது வீட்டின் மீது 293 முறை துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கலவரங்களால் தங்களுடையக் கட்சிக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் இதுபோன்ற சம்பவங்களின் பின்னணியில் ஒருபோதும் தமது கட்சி இருக்காதென, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், குழந்தைபோல அநுர பேசினார்.

எனினும் கட்சி தலைவர்களின் கூட்டத்தில் இடைநடுவே எழுந்து சென்றிருந்த அநுர குமார, பாராளுமன்றத்தின் பின் நுழைவாயில் வழியாக பாராளுமன்றத்தில் இருந்து செல்லும்போது ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தாக்குதலில் ஈடுபடுங்கள் என கூறுகிறார். பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அநுர இருகதைகளை கூறுகிறார் என்றார்.

1988, 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்களின்போது ஜே.வி.பியினர் எனது வீட்டுக்கு மாத்திரம் 293 முறை துப்பாக்கி சூடுகளை நடத்தினார். வேண்டுமென்றால் பொலிஸ் அறிக்கைகளை பாருங்கள். அன்றும் என்னை கொலை செய்யப் பார்த்தீர்கள். அன்றும சரி, இன்றும் சரி நாம் உங்களுக்கு அடிப்பணிந்து செல்லவில்லை எனவும் தெரிவித்தார்.

எனவே வன்முறை சம்பவங்களில் ஈடுபட வேண்டாம். அடுத்து ஜே.வி.பியினர் ஆட்சி வரும் என்கிறீர்கள். அப்படி என்றால் ஏன் வன்முறைகளில் ஈடுபடுகிறீர்கள் எனவும் இதன்போது கேள்வி எழுப்பினார்.



அதிகாரிகள் அசமந்தம்;

# நீதி கோரும் பொதுமகன்

## வீதியில் மதில் கட்ட யார் அனுமதி கொடுத்தது?

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முள்ளியவளை உப பிரதேச செயலகத்தின் அதிகாரிகளின் அசமந்த போக்கால் தமது வீட்டுக்குச் செல்லும் வீதி தடைப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட நபரொருவர் தெரிவித்தார்.

பொது வீதியைப் பிடித்து, எல்லைஇட்டு, மதில்கட்டும் நடவடிக்கை தொடர்பில் பிரதேச சபை உள்ளிட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்தார்.

முள்ளியவளை, 03 ஆம் வட்டாரம், ஐயன்கோவிலடி பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர் ஒருவர், தனது வீட்டுக்குச் செல்லும் பிரதேச சபைக்குரிய வீதியை மறித்து, தூண்போட்டு தகரம் அடித்துள்ளதால், வீதியில் செல்லமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக




முறையிட்டுள்ளார்.

27 ஆண்டுகளுக்கு மேலாக பாவனையில் இருந்த வீதியை பிடித்து வேலியிடுவதற்கு யார் அனுமதி கொடுத்தது என்ற கேள்வி எழும்பியுள்ளது.

பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் சி.லோகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் வீதி காணப்படுவதாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடைபெற்று ஒருமாதம் கடந்துவிட்ட நிலையில், தற்போது



வீதியை மறித்து, மதில் கட்டும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தான் பொலிஸ், பிரதேச சபை, அரசாங்க அதிபர் உட்பட அரச திணைக்களங்களுக்குத் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், மனித உரிமை ஆணைக்குழுவை நாடவுள்ளதாக பாதிக்கப்பட்ட நபர் மேலும் தெரிவித்தார்.



பொதுச் சந்தையில்

# கண்ணிவெடி விழிப்புணர்வு

■ மு.தமிழ்ச்செல்வன்

கண்ணிவெடிகள் விழிப்புணர்வுச் செயற்பாடு ஒன்று, கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று (06) முன்னெடுக்கப்பட்டது.

ஏப்ரல் 4ஆம் திகதி சர்வதேச கண்ணிவெடிகள் செயற்பாட்டுத் தினமாகும். அதனையொட்டியே, சமூக நல்லிணக்கத்துக்கான டெல்வோன் உதவி அமைப்பு (Delvon Assistance For Social Harmony) கிளிநொச்சி, கரைச்சி பொது சந்தையில் கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வை முன்னெடுத்தது.

கண்ணிவெடிகள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்ற எண்ணக்கருவில், பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக, மேற்படி அமைப்பினர் தெரிவித்தனர்.

அதேவேளை, இச் செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர்.

பஸ்ஸின் சில்லில் அகப்பட்டு,

# பயணி உயிரிழப்பு

■ எம். றொசாந்த்

எரிபொருளுக்காக வரிசையில் நின்ற தனியார் பஸ்ஸில் வந்த நபரொருவர், அந்த பஸ்ஸின் சில்லில் அகப்பட்டு, உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற இந்த சம்பவத்தில் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் சதீஸ் (வயது 37) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, அந்த பயணி, யாழில் இருந்து வயாவிளான் நோக்கி பஸ்ஸில் பயணித்துள்ளார். பயணத்தின் போது, பஸ்ஸில் தூங்கியமையால், வயாவிளானில் இறங்கவில்லை. பஸ் நடத்துநரும், அதைக் கவனிக்கவில்லை.

அவர் மீண்டும் வசாவிளான் செல்வதற்காக யாழ்ப்பாணம் நோக்கி மீண்டும் பஸ்ஸில் பயணித்த போது, புன்னாலைக்கட்டுவனில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலுக்காக வரிசையில் பஸ் காத்திருந்துள்ளது.

அதன்போது, குறித்த பயணி, பஸ்ஸில் இருந்து கீழே இறங்கி, நிலத்தில் அமர்ந்திருந்துள்ளார். அதனை அவதானிக்காத சாரதி பஸ்ஸை எடுத்த போது பயணி மீது பஸ் ஏறியுள்ளது .

இதில் அவர் உயிரிழந்துள்ளார்.

# அக்காவின் கணவனால் சிறுமி துஷ்பிரயோகம்

## நண்பனுக்கு வலைவீச்சு

■ செந்தூரன் பிரதீபன்

தனது மனைவியின் தங்கையான 15 வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரொருவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விளக்கமறியல் உத்தரவை, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சரோஜினி இளங்கோவன், நேற்று முன்தினம் (06) பிறப்பித்தார்.

ஊர்காவற்துறை பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட அல்லைப்பிட்டி பகுதியில் இந்தச் சம்பவம் பதிவாகி உள்ளது. பிரதேசத்துக்குப் பொறுப்பான சிறுவர் உரிமை அதிகாரிகள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டடிருந்தார்.

மேற்படி நபர் தொடர்ச்சியாக சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும், சிறுமிக்கு மயக்க மருந்து வழங்கி, தனது நண்பரையும் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடம் கொடுத்துள்ளார். இதனையடுத்து, அவரது நண்பரை கைது செய்யும் நடவடிக்கை ஊர்காவற்றுறை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால்

# கேள்விக்குறியாகும் வைத்திய சேவைகள்

## கிளிநொச்சியில் போராட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

அரசாங்கத்தின் செயற்பாடுகளால்தான் மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்களுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் வைத்திய சேவைகளை முழுமையாக முன்னெடுக்க முடிவில்லை எனவும் தெரிவித்து, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் முன்பாக நேற்று (06) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிலைய வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய உதவியாளர்கள் இணைந்து நண்பகல் 12 மணியளவில் வைத்தியசாலை வளாகத்தில் இப்போராட்டத்தை ஆரம்பித்து, பிரதான வீதி வரை சென்று அங்கு




கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வைத்தியர்கள், “தற்போது மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைகளுக்குத் தேவையான பொருட்கள் பற்றாக்குறையாக உள்ளன. இருப்பதைக் கொண்டு மக்களுக்கு சேவையை வழங்கி வருகின்றோம். சிக்கனமாக பயன்படுத்துகின்றோம். இந்த நிலை தொடருமானால் வைத்திய சேவையை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும். மக்கள் பெரும் சவால்களுக்கு முகங் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும்” என்றனர்.



தற்போதைய அரசாங்கத்தைப் போன்று

# “வீட்டையும் விரட்டுவோம்”

## தர்மலிங்கம் சுரேஸ் தெரிவிப்பு

■ வா.கிருஸ்ணா

தமிழ் மக்களின் ஆணையைப்பெற்று, பொய்யான வேடதாரிகளாக இன்று செயற்பட்டுவரும், வீட்டை சின்னமாகக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்கிலிருந்து விரைவில் மக்களால் விரட்டியடிக்கப்படுவார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண இணைப்பாளருமான தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளே இன்று தெற்கில் ஆட்சியாளர்களை விரட்டியடிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

“தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை பெரும்பான்மையின மக்களுக்குத் தெரியப்படுத்தாது, அவர்களுக்கு பொய்களைக் கூறி இதுவரை காலமும் அந்த மக்களை ஏமாற்றினர். இனப் படுகொலைகளை செய்வதற்காக அந்நிய நாடுகளிடம் கடனை வாங்கி, போரை முன்னெடுத்து, தற்போது கடன்பொறிக்குள் சிக்கியுள்ளனர்.

“தமிழ் மக்கள் தங்களது இருப்புக்காகவும் சுய நிர்ணயத்துக்காகவும் உரிமைக்காகவும்தான் போராடினார்கள் என்ற உண்மையை, பெரும்பான்மையின மக்கள் இன்று உணர்ந்திருக்கின்றார்கள். இதனால் ஆட்சியாளர்களை அடித்து விரட்டுகின்றனர்.

“இதேபோன்றுதான் தமிழ் மக்கள் மத்தியில் இரட்டைவேடம் பூண்டு, வேடதாரிகளாக செயற்பட்டுவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் மிக விரைவில் வட,கிழக்கு தமிழ் மக்களால் அடித்துவிரப்பட்டப்படும் நிலையேற்படும்.

“2009இல் தமிழ் மக்களுக்கு நடந்தது இன அழிப்பு. இந்த இன அழிப்புக்கான சர்வதேச விசாரணைக்கான சந்தர்ப்பங்கள் கிடைத்போதேல்லாம் அதனை கோராமல், தங்களது பதவிகளுக்காக தங்களது பைகளை நிரப்புவதற்காக கோட்டாபய அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை முன்கொண்டு சென்றனர்.

“தமிழ்த் தேசிய உணர்வுடன் உள்ளவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவேண்டும். தொடர்ந்து அங்கு இருப்பீர்களானால் இன்று அரசாங்கம் துரத்தியடிக்கப்படுவதுபோன்று உண்மையறிந்து, தமிழ் மக்களால் ஒரு நாள் துரத்தியடிக்கப்படுவீர்கள்” என்றார்.











# “கோட்டா போ, நாட்டை தா”

■ கனகராசா சரவணன்

ராஜபக்ஷர்களின் ஆட்சி வேண்டாம்; மக்கள் ஆட்சியே வேண்டுமென வலியுறுத்தி, மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் நேற்று (06) அணிதிரண்ட பெண்கள், அரசாங்கத்துக்கு எதிராக அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட பெண்கள் நிறுவன வலையமைப்பும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண் உறுப்பினர்கள் ஒன்றியமும் இணைந்து இந்த ஆர்பாட்டத்துக்கான அழைப்பை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து காந்தி பூங்காவிற்கு முன்னால் நேற்றுக் காலை 9 மணிக்கு ஒன்றுதிரண்ட நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள், “அரிசி, பால்மா, மின்சாரம் பெற்றோல், மருந்து மற்றும் பசளை இல்லை”, “கோட்டா போ, நாட்டை தா” மற்றும் “ஊழல் நிறைந்த ஆட்சி இன்றுடன் முடியட்டும்” எனக் கோஷமிட்டனர்.

# கஞ்சாவுடன் இருவர் கைது

■ எம்.எம்.அஹமட் அனாம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணாணை, மியான்குளம் பகுதியில் 3,100 கிராம் கேரளா கஞ்சாவுடன் இளைஞர்கள் இருவர், நேற்று (06) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவ்விரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வியாபாரத்துக்காக கிளிநொச்சியில் இருந்து மட்டக்களப்புக்கு மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் வந்துள்ள நிலையில் கைது செய்யப்பட்டு, வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் தொடர்புடைய வியாபாரிகள் வேறு யாராவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





சேதனப் பசளை உற்பத்திக்கான

# உபகரணங்கள் வழங்கல்

■ எப்.முபாரக்

நிலைபேறான சேதன விவசாய கலாசார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சேதனப் பசளை உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் நேற்று (06) நடைபெற்றது.

தெரிவுசெய்யப்பட்ட 09 பயனாளிகளுக்கு 4 மில்லியன் ரூபாய் நிதி செலவில் சேதனப்பசளை உற்பத்தி உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கு முன்னர் இரு கட்டங்களாக இந்த உபகரணங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாய சங்கங்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தினதும் மொத்த பெறுமதி 11 மில்லியன் ரூபாயாகும். இதுவரை மொத்தமாக 27 பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு கட்டங்களில் வழங்கப்பட்ட உபகரணங்கள் மூலம் இதுவரை 2,500 மெட்ரிக் தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. தரநியமங்களை பேணி இச்சேதனப்பசளை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கே.குகதாசன், மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரன், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாஸன், உதவிப் பணிப்பாளர் (உரம்) எச்.ஜி.எஸ்.பிரேமரத்ன உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

மக்களின் போராட்டத்துக்கு

# எமது கட்சி ஆதரவு வழங்கும்

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு



அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தன்னிச்சையான செயற்பாடுகளின் விளைவாக நாட்டு மக்கள் கொந்தளித்து இருக்கின்றார்கள். இனம், மதம், மொழி என்பவற்றினை கடந்து அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் நாடுதழுவிய போராட்டங்களில் ஈடுபட்டு கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில், தலவாக்கலையில் நடைபெறவிருக்கும் போராட்டத்துக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முழுமையான ஆதரவை வழங்கும்.

பெருந்தோட்ட மலையக மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கவும் அவர்களின் தொழில் பாதுகாப்பையும் இருப்பையும் உறுதி செய்யவும் அரசாங்கத்தின் பொய்த்துப்போன வாக்குகளுக்கு பதிலடி வழங்கவும் பதுளை எங்கும் பல போராட்டங்கள் நடைபெறவிருக்கின்றது என்றார்.

# பரீட்சையில் சித்தி

நுவரெலியா கல்வி வலயத்திற்கு உட்பட்ட வங்கிஓயா இலக்கம் 1 பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், சுரேஸ்குமார் நிதர்சன் 150 புள்ளிப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் செ.மனோகரர், அதிபர் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

அபிவிருத்தி பணிகள் முடங்கின

# நிதிக்கு என்ன நடந்தது?

## பிரதேச மக்கள் கேள்வி

■ துவாரகஷான்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் பணிப்புரைக்கு அமைவாக, மத்திய மாகாண வீதி அதிகார சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட டயகம நகரிலிருந்து போடைஸ் ஊடாக, ஹட்டன் செல்லும் பிரதான வீதியின் அபிவிருத்தி பணிகள் முடங்கியுள்ளதால் மக்கள் பெரும் அளௌகரியத்துக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு குறித்த வீதியூடாக ஹட்டன் நோக்கி சென்ற தனியார் பஸ், போடைஸ் பிரதேசத்தில் பாதையை விட்டு விலகி விபத்துக்கு உள்ளானதில் 20 பேர் பலத்த காயங்களுடன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் அடிக்கடி இப்பாதையில் விபத்துகள் இடம்பெறும் நிலையில், பிரதேச மக்கள் வீதியில் இறங்கி ஆர்பாட்டங்கள் செய்து பாதையை புனரமைத்து தருமாறு, மலையக அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமையவே, பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தலைமையில், மத்திய மாகாண வீதி அதிகார சபையின் மூலம் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆனால், தற்போது அபிவிருத்தி பணிகள் அனைத்தும் முடங்கிக் கிடப்பதுடன் ,அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன .

கொங்கீரிட் கற்கள் ஆங்காங்கே கொட்டப்பட்டுள்ளன. இதேவேளை மன்றாசி- கல்மது பிரதேசத்தில் உள்ள பாதையில் இருபக்கங்களிலும் இரண்டு அடி ஆழமாக வெட்டப்பட்டுள்ள வடிகான்கள் இதுவரை மூடப்படவில்லை.

இதன் காரணமாக இரவு நேரங்களில் வாகனங்கள் செல்லும் போது விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே, இப்பாதை புனரமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது? என பிரதேசவாசிகள் கேள்வி எழுப்புவதுடன்,

மக்களின் நலன் கருதி இப்பாதையை உடனடியாக புனரமைத்து தருவதற்கு சகல தரப்பினரும் முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

சர்வாதிகாரமோ, குடும்ப ஆட்சியோ எமக்கு வேண்டாம்

# “தலைமைத்துவமே வேண்டும்”

## சட்டத்தரணிகள் ஒன்றித்து குரல் எழுப்பினர்

■ எம். பிரபா




எமக்கு பொறுப்பு கூறும் தலைமைத்துவ அரசாங்கமே வேண்டும். சர்வாதிகாரமோ குடும்ப ஆட்சியோ எமக்கு வேண்டாம் என ஹட்டன் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் (5) நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையை அரசாங்கத்துக்கு உணர்த்தவும் அதற்கு எதிராகவுமே தாம் வீதியில் இறங்கியுள்ளதாக சட்டத்தரணிகள் இங்கு கருத்து தெரிவித்தனர்.

நாட்டின் அமல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தின் ஊடாக சமூக வலைத்தளங்களை முடக்கம், பொது மக்கள் மீதான வன்முறை என்பவற்றுக்கு எதிராக தாம் நிற்பதுடன், இந்த வன்முறைகள் மூலம் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு நீதி உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு தாம் எப்பொழுதும் முன் நிற்பதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

# மின்னல் தாக்கியதில் நால்வர் பாதிப்பு

■ செ.தி.பெருமாள்

சாமிமலை, ஓல்ட்டன் தோட்டத்தில் பணியாற்றி கொண்டிருந்த தொழிலாளர்கள் நால்வர், மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (5) மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மின்னல் தாக்கத்திற்கு இலக்கான நால்வரும் 27 வயது முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் என மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி எச். பண்டார கருத்து தெரிவிக்கையில், தற்போது மத்திய மலைநாட்டில் மாலை நேரங்களில் இடி மின்னலுடன் கனத்த மழை பெய்வதால், தொழிலாளர்கள் அவதானத்துடன் பணிகளில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தினார்.

டீசலால் நேற்றும்

# கந்தபளையில் பதற்றம்




■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை நகரிலுள்ள ஐ.ஒ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பதற்றமான நிலைமையொன்று நேற்று ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த (30) ஆம் திகதிக்கு பின்னர் நேற்று (06) காலையிலேயே வாகனங்களுக்கான டீசல் விநியோகிக்கப்பட்டது.

சுமார் மூவாயிரம் லீட்டர் டீசல் இறக்கப்பட்டு அவை வழங்கப்பட்ட நிலையில், அங்கு 300க்கும் அதிகமான வாகனங்கள் டீசல் பெற்றுக்கொள்ள காத்திருந்தன.

இருப்பினும் சுமார் 50 வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டதன் பின்னர், டீசல் தீர்ந்து விட்டது என நிலைய முகாமையாளர் தெரிவித்துவிட்டார். இதனால், கோபமடைந்த சாரதிகள், முகாமையாளருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதால், அங்கு பதற்றம் ஏற்பட்டது.

எனினும் கந்தப்பளை பொலிஸாரால், பதற்ற நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் டீசல் இல்லாமல் திரும்பிச் செல்லப் போவதில்லை என தெரிவித்து அங்கேயே பலரும் காத்து கிடந்தனர்.

நீண்ட நாள்களுக்குப் பின்னர்

# மண்ணெண்ணெயை கண்ட ஹட்டன் மக்கள்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ



ஹட்டனிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் நுகர்வோருக்கு நேற்று (6) மண்ணெண்ணெய் விநியாகிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் பிரதேசத்தில் சமையல் எரிவாயு உரிய முறையில் கிடைக்காமை காரணமாக, மண்ணெண்ணெயை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனினும், மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்வதிலும் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். பல வாரங்களுக்கு பின்னர், விநியோகிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாலை தொடக்கம் வரிசையில் நுகர்வோர் காத்திருந்தனர். 500 ரூபாய்க்கு மட்டும் என்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவே மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# உணவகங்கள் பலவற்றுக்குப் பூட்டு



■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹட்டன் நகருக்கு பல நாள்களாக லிட்ரோ சமையல் எரிவாயு கிடைக்காமை காரணமாக, நகரிலுள்ள உணவகங்கள் பல மூடப்பட்டுள்ளன.

கடந்த பத்து நாள்களாக ஹட்டன் நகரிலுள்ள எரிவாயு முகவர் நிலையங்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கப்படவில்லை என முகவர் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், தினமும் அதிகாலையில் இருந்தே சமையல் எரிவாயு கொள்வனவுக்காக காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சமையல் எரிவாயு முகவர் நிலையங்கள் முன்பாக நேற்றும் (6) நீண்ட வரிசைகளில் நுகர்வோர் காத்திருந்தாலும் பகல் 12 மணிவரை சமையல் எரிவாயு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.







## மலையக நகரங்களில் எதிர்ப்புப் பேரணிகள்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என தெரிவித்து, மலையகத்தின் பல பிரதேசங்களிலும் எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்ந்தும் வலுப்பெற்று வருகின்றன. இந்தநிலையில் நேற்றும் கொட்டகலை, கேகாலை, மாத்தளை, டிக்கோயா, தலவாக்கலை உள்ளிட்ட பல நகரங்களில் எதிர்ப்பு பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன. (மலையக நிருபர்கள்)











# பட்டினிச் சாவுக்கான புதைகுழிகளை வெட்டிவிடாதீர்கள்

ஒரு வார்த்தையான "இல்லை! இல்லை! இல்லை!" என்பது இன்று நேற்றல்ல; பல மாதங்களுக்கு முன்பிருந்தே கேட்டுக் கேட்டுப் புளித்துவிட்டது. எதைக் கேட்டாலும் இல்லையென்ற நிலைமைக்குள் நாடு விழுந்துவிட்டது.

எனினும், பட்டினி வயிறுகளின் மீதேறி அரசியல் செய்யும் நிலைமையிலேயே, மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனர் என்பதுதான் வெட்கக்கேடு. நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில், பாராளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

முதல்நாளான நேற்று (06), உறுப்பினர்களின் உரைகளில் பல, பழைய பல்லவிகளாகவும் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசிக் கொள்வதாகவும் இருந்தது. உருப்படியான எந்த யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. இன்றைய உரைகளின் போதும், ஆரோக்கியமான ஆலோசனைகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும்.

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு; பொறுமையை இழந்தமையால்தான், மக்கள் விடிய விடிய போராட்டக் களத்தில் நிற்கின்றனர் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான கால எல்லையை, ஆளும் தரப்பினர் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், சேறுபூசி, குளிர்காய்ந்துவிட்டனர்.

எதிரணியினர் கூட, உருப்படியான யோசனைகளை முன்வைக்கவில்லை. அரசியல் பேச்சுகளின் ஊடாக, உசுப்பேத்திக் கொண்டிருந்தனர். இது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பனவாய் இருக்காது. "உங்கள் குப்பைகளை, நாங்கள் ஏன் கூட்ட வேண்டும்?" என்றமையால், எதிரணியில் இருந்து உருப்படியான யோசனைகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும்.

அங்காடிகள் உட்பட, பெட்டிக்கடைகள் வரையிலும் இறாக்கைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. தன்னுடைய குழந்தைக்கு பால்மா கிடைக்கவில்லை என்பதற்காக, பொகவந்தலாவை நகரிலுள்ள கோபுரமொன்றின் மீது ஏறி, தந்தையொருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். தனது பிள்ளைகள் உட்பட குடும்பத்தினர் பட்டினியில் கிடப்பதால், களுத்துறையில் தந்தையொருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

எதற்கெடுத்தாலும் வரிசை என்றாகி விட்டது. வரிசைகள் நீளுகின்றனவே தவிர, குறையவில்லை. இவ்வாறு வரிசைகளில் நின்றிருந்தோரில், இதுவரையிலும் நால்வர் மரணித்துவிட்டனர்.

ஆடம்பரப் பொருட்களுக்கான விலைகளை அதிகரித்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்தால்கூட, நாங்கள் எல்லோரும் நிம்மதியாக இருப்போமென பொதுமக்கள் குமுறத்தொடங்கிவிட்டனர். வேலைவாய்ப்புகள் குறைந்துவிட்டன. வேலை நாள்களும் குறைக்கப்பட்டுள்ளன. மேலதிக வேலைகள் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் பட்டினி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமென, சபாநாயகர் மஹிந்த அபேவர்தன, பாராளுமன்றத்துக்கு நேற்று அறிவித்தார். அத்தியாவசியப் பொருட்களுக்கான 'தட்டுப்பாடு', 'இல்லை' இவ்விரண்டும் இல்லாமல் செய்யாவிடின், பட்டினியையும் பட்டினிச் சாவையும் தடுக்கமுடியாது.

பட்டினியின் இறுதி, சாவாகும். அவ்வாறு மரணிப்போரைப் புதைப்பதற்கான புதைகுழிகளை வெட்டுவதற்கு இடமளித்துவிடாதீர்கள். பழைய பல்லவிகளை ஒதுக்கிவைத்துவிட்டு, நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை கருதி, தீர்க்கதரிசனமான தீர்மானங்களை எடுப்பதே காலத்தின் தேவையாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

அநேக இளைஞர்கள் தாம் திருமணம் செய்து கொள்ளமாட்டோம் என வீம்புடன் சொல்வார்கள். ஆனால், காலப்போக்கில் காதலித்துக் கல்யாணம் செய்துவிடுவார்கள். ஒருசிலர் பெற்றோர் பார்க்கும் பெண்ணைத் திருமணம் செய்வதுண்டு.

ஆனால், பல இளைஞர்கள் கொழுத்த சீதனம் வாய்க்கும் வரை, தமக்கான மணமகளைத் தேடிக்கொண்டிருப்பர். இதனால், பல ஆண்டுகள் விரயமாவதும் உண்டு.

பெண் துணையின்றி ஓர் ஆணும் ஆண் துணையின்றி பெண்ணும் வாழ்வது கடினம். ஒருவருக்கு ஒருவர் இணைந்து, சந்தோசமாக வாழ்ந்து, பிள்ளைகளைப் பெற்று, தங்கள் பெற்றோர் உறவுகளுடன் வாழ்வது இனிமையானது இல்லையா?

குடும்பப் பொறுப்புள்ள ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் வீட்டின் உடன்பிறப்புகளுக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுக்க வேண்டியுள்ளதால், திருமண காலம் பின்தள்ளப்படுகின்றது. ஒரு சிலருக்கு திருமண பந்தமும் இல்லாமலும் போய்விடுகின்றது.

எமது சமூகத்தில் சீதனப் பிரச்சினையால் பல குடும்பங்கள் ஏக்க நிலையுடன் இருக்கின்றார்கள். இந்நிலை எப்போது அகலும்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான போர்க்கோலம்



புருஜோத்தமன் தங்கமயில்

ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக, முழு நாடும் போர்க்கோலம் பூண்டிருக்கின்றது. ராஜபக்‌ஷர்கள் ஆட்சி அதிகாரத்தை விட்டு, வீட்டுக்கு செல்லும் வரை இந்தப் போர்க்கோலம் இன்னும் இன்னும் தீவிரமடையும் நிலையே காணப்படுகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் மிரிஹான இல்லத்துக்கு முன்பாக, கடந்த வாரம் மாபெரும் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அன்று ஆரம்பித்த ராஜபக்‌ஷர்களின் வீடுகள், வளவுகளை முற்றுகையிடும் போராட்டம், மஹிந்த ராஜபக்‌ஷவின் தங்காலை வளவு, அவர் தற்போது வதியும் கொழும்பு இல்லம், பசில் ராஜபக்‌ஷவின் பத்தரமுல்லவிலுள்ள வீடு என்று ஒவ்வொரு நாளும் போராட்டக்காரர்களால் சூழப்படுகின்றது.

பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் ராஜபக்‌ஷர்களினதும், அவர்களின் தீவிர விசுவாசிகளான அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைப் பாதுகாப்பதே பிரதான வேலையாகிப் போய்விட்டது.

அது மாத்திரமல்லாமல், அநுராதபுரத்தில் இருக்கும் ஒரு சோதிடப் பெண்மணியின் வீட்டுக்குத் தொடர் பாதுகாப்புகளை வழங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பெண்மணியிடம்தான் கோட்டா தன்னுடைய சோதிட விடயங்களைக் கேட்டு நடக்கின்றார்.

கொரோனா காலத்தில் நாடு முடக்கப்பட்டிருந்த போது, கண்டி தலதா பெரஹறாவை நடத்துவதற்கான ஆலோசனை, குறித்த சோதிடப் பெண்ணினால் கோட்டாவுக்கு வழங்கப்பட்டது. அதற்கமைய அவர் பெரஹறாவை நடத்தவும் செய்தார்.

இப்படி, ராஜபக்‌ஷர்களுக்கு யார் யாரெல்லாம் நெருக்கமானவர்களோ, அவர்களால் ஆதாயம் பெற்றவர்களோ அவர்களையும் கூட மக்கள் எதிர்க்க ஆரம்பித்திருக்கின்றார்கள். அதனால், செத்த நாயில் இருந்து கழன்று செல்லும் உண்ணிகள் போல, ராஜபக்‌ஷர்களைவிட்டு பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பலரும் விலகத் தொடங்கிவிட்டார்கள்.

செவ்வாய்க்கிழமை (05) பாராளுமன்றத்தில் ராஜபக்‌ஷர்களின் ஆட்சிக்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை இழக்கப்பட்டுவிட்டது. சாதாரண பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான 113 உறுப்பினர்ளின் ஆதரவு தற்போது ராஜபக்‌ஷர்களிடம் இல்லை.

எதிர்க்கட்சிகள் மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படப்போவதாக அறிவித்த விமல் வீரவங்ச தலைமையிலான அணி, அநுர பிரியதர்சன யாப்பா தலைமையிலான அணி, சுதந்திரக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்டவற்றின் உறுப்பினர்களைச் சேர்ந்தால் தற்போது அது 118 என்கிற அளவில் இருக்கின்றது.

நாடு பூராவும் போராட்டம் வலுத்து வருகின்ற நிலையில், ராஜபக்‌ஷர்களோடு இருக்கின்றவர்களில் இன்னும் கணிசமான தொகையினர் எதிர்க்கட்சிக்கு செல்வார்கள் அல்லது சுயாதீனமாக இயங்கும் வாய்ப்புகள் உண்டு. ஏனெனில், ராஜபக்‌ஷர்களோடு இருப்பவர்களுக்கு எதிரான போராட்டம், நினைத்துப் பார்க்க முடியாத கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலை ஏற்படும் என்று ராஜபக்‌ஷர்களோ, அவர்களுக்கு எதிராகப் போராடும் மக்களோ, கனவிலும் நினைத்திருக்கவில்லை. ஆனால், அதுதான் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துவிட்டதான பயத்தில், வெள்ளிக்கிழமை (01) இரவு பிறப்பித்த அவசரகால சட்டத்தை, செவ்வாய்க்கிழமை (05) நள்ளிரவு வர்த்தமானி அறிவித்தலூடாக மீளப்பெற்றிருக்கின்றார். மக்கள் போராட்டங்களை, அவசரகால சட்டத்தின் ஊடாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம் என்று கோட்டா நினைத்தார். அதன்போக்கில், பொலிஸ் ஊரடங்குச் சட்டங்களையும் பிறப்பித்துப் பார்த்தார். ஆனால், அதுவெல்லாம் வயிற்றுப் பசியால் வாடும் மக்களை அடக்கப் போதுமானதாக இல்லை.

மக்கள் வீதிக்கு வந்தார்கள். போராட்டங்களின் வழி, அடக்குமுறைக்கு பதில் சொல்ல ஆரம்பித்தார்கள். அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், 14 நாள்களுக்குள் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அங்கிகாரம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறான நிலையில், அவசரகால சட்டத்தின் மீது, தற்போது வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அது தோற்கடிக்கப்படலாம். அது, ராஜபக்‌ஷர்களின் தோல்வி; பாராளுமன்றத்துக்குள் நிலைநாட்டப்பட்டதாகிவிடும் என்ற நோக்கிலும் நீக்கப்பட்டிருக்கின்றது.

ராஜபக்‌ஷர்களை வீட்டுக்கு செல்லுமாறு ஆரம்பித்த போராட்டம், இன்றைக்கு ராஜபக்‌ஷர்கள் கொள்ளையிட்ட பணத்தை, மீட்க வேண்டும் என்கிற கோஷங்களை அடைந்திருக்கின்றது. ராஜபக்‌ஷர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும், தங்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்புக் கருதி, வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

ஆனால், ஆட்சி அதிகாரத்தை விட்டுச் செல்வதற்கு ராஜபக்‌ஷர்கள் தயாராக இல்லை. மாறாக, தங்களுக்கு எதிரான மக்களின் கோபத்தை, மடைமாற்றும் வேலைகளைச் செய்வது தொடர்பில் கவனம் செலுத்துகிறார்கள்.

தற்போது மக்கள் பூண்டுள்ள போர்க்கோலத்துக்கும், அரசியல் கட்சிகளுக்கும் பெரிய சம்பந்தம் ஏதுமில்லை. கட்சிகளை வெளியில் நிறுத்திக் கொண்டே, மக்கள் போராடுகிறார்கள். பிரதான எதிர்க்கட்சியினரும், ஆட்சிக்கு எதிரான போராட்டங்களை நடத்தினாலும், மக்களின் போராட்டத்துக்குள் நுழைந்துகொள்ளவில்லை. அவ்வாறு நுழைந்தால், தங்களுக்கு எதிராகவும் மக்கள் திரும்புவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

அதுபோல, எந்தவொரு தருணத்திலும் ராஜபக்‌ஷர்கள் அங்கம் வகிக்கும் எந்தவோர் ஆட்சிக் கட்டமைப்பிலும் இணைந்து கொள்வதற்கும் எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. ஏனெனில், ராஜபக்‌ஷர்கள் அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதன் ஊடாக, தங்கள் மீதான மக்களின் கோபத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். ராஜபக்‌ஷர்களின் இந்த நினைப்பிற்கு ஒருபோதும் இணங்கக் கூடாது என்பதில் எதிர்க்கட்சிகள் குறியாக இருக்கின்றன.

ராஜபக்‌ஷர்கள் முழுவதுமாக இராஜினமாச் செய்துவிட்டு, ஆட்சியைவிட்டுச் செல்ல வேண்டும்; அல்லது, தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும் என்பதுதான் சஜித் பிரேமதாஸவின் எண்ணம். அதனைத்தான் அவர் வெளிப்படுத்தியும் இருக்கின்றார்.

ஏனெனில், ராஜபக்‌ஷர்கள் பதவியை தக்க வைத்துக் கொள்ள எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளும், அவர்களுக்கு எதிராகத் திரும்பும் நிலையே காணப்படுகின்றது. அப்படியான நிலையில், தேர்தல் வெற்றியொன்றுக்காகக் காத்திருப்பதுதான் நல்லது என்பது, சஜித்தின் எண்ணம். முழுமையான ஆட்சி அதிகாரத்துக்கான அவாவோடு இருக்கும் எந்தத் தரப்பும் அப்படித்தான் இயங்கும்.

தற்போதுள்ள நெருக்கடி நிலையை, உண்மையிலேயே எப்படி சமாளிப்பது என்று பாராளுமன்றத்துக்குள் இருக்கின்ற எந்தக் கட்சிக்கும் தெரியவில்லை என்பதுதான் முக்கியமான விடயம். ஏனெனில், ராஜபக்‌ஷர்களை வீட்டுக்கு செல்லுமாறு மக்களோடு சேர்ந்து எதிர்க்கட்சிகள் கோரினாலும், வீழ்ந்து கிடக்கின்ற பொருளாதாரத்தை எப்படி மீட்டெடுப்பது என்பது தொடர்பில் எந்தவித திட்டங்களையும் அவர்கள் இதுவரை முன்வைக்கவில்லை.

நாடு எதிர்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் தேர்தலொன்றை நடத்துவது என்பது இன்னும் இன்னும் வீணான செலவுகளை இழுத்துவிடும் வேலையாகவே இருக்கும். அப்படியான நிலையில், புதிய ஏற்பாடு ஒன்று குறித்து எதிர்க்கட்சிகள் சிந்தித்தாக வேண்டும். அது, நாட்டு மக்களின் குரல்களை உள்வாங்கியதாக இருக்கவும் வேண்டும்.

69 இலட்சம் மக்களின் ஆணை இன்னமும் ராஜபக்‌ஷர்களோடு இருப்பதாகவும், அப்படியான நிலையில் ராஜபக்‌ஷர்கள் பதவி விலக வேண்டியதில்லை என்றும் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ கூறியிருந்தார். நாடு பூராவும் மக்கள், ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிற நிலையிலும் கூட, இவ்வாறான கூற்றை ஜொன்ஸ்டனால் கூற முடிந்துள்ளமை என்பது, ராஜபக்‌ஷர்களின் ஆட்சி அதிகாரத்துக்கான நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்பதையே காட்டுகின்றது.

ஆனால், ராஜபக்‌ஷர்கள் பதவிகளைத் துறக்கும் வரையில், நாடு தற்போது பூண்டுள்ள போர்க்கோலமும் அடங்கிவிடாது. ராஜபக்‌ஷர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாத வரையில், எதிர்வரும் நாள்கள் இன்னும் இன்னும் மோசமான நெருக்கடி நிலையையே பதிவிடச் செய்யும்.

## கடிதங்கள்

### தயவுசெய்து புனரமைத்து தாருங்கள்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட பெரிய சாளம்பன், தட்டையமலை தமிழ் விளையாட்டு கழகத்தின் மைதானத்தை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தட்டையர் மலை பிரதேசத்தில் பெரியசாளம்பன் பகுதியில் அமைந்துள்ள இரண்டு ஏக்கர் பரப்பளவு கொண்ட தமிழ் விளையாட்டு கழகத்துக்காக ஒதுக்கப்பட்ட காணி, கடந்த ஆண்டுகளுக்கு முன்னர் கிராம இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கொவிட்-19 காலத்தில் முற்றாக முடக்கி இருந்தமையால், அந்த மைதானம் பயன்படுத்தப்படவில்லை. விளையாட்டு மைதானம் புற்கள் முளைத்து பற்றைக்காடாக காணப்படுகின்றது. இதனை துப்புரவு செய்து தருமாறு விளையாட்டு கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

செ. கீதாஞ்சன்

புதுடெல்லி

# “சில கட்சிகளுக்கு குடும்ப பக்தி”



“நாம் தேசபக்தியோடு இருக்கிறோம்; சில கட்சிகளுக்கு குடும்பபக்தி மட்டும்தான் இருக்கிறது” என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) 42 ஆவது நிறுவன தின விழா, புதுடெல்லியில் நேற்று (06) நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் கூறியதாவது: “பா.ஜ.க தேசபக்தியோடு அர்ப்பணிப்புடன் இயங்குகிறது. ஆனால், எதிர்க்கட்சிகளுக்கு குடும்ப பக்தி மட்டும் தான் தெரியும். இன்று உலகமே, இந்தியாவை உற்று நோக்குகிறது. இரண்டு பெரும் ஜாம்பாவன்களுக்கு இடையேயான பிரச்சினையில் (ரஷ்யா, அமெரிக்கா) நாம் யாருக்கும் அஞ்சாமல், எந்த அழுத்தத்துக்கும் அடிபணியாமல் இருக்கிறோம். இந்திய அரசாங்கம் தேச நலனை எல்லாவற்றிற்கும் மேலாக வைத்து செயற்படுகிறது.

இந்தச் சூழலில் ஒவ்வொரு பா.ஜ.க உறுப்பினருக்கும் கூடுதல் பொறுப்பு இருக்கிறது. ஒவ்வொரு தொண்டருமே, தேசத்தின் கனவுகளின் பிரதிநிதிகளாக செயற்பட வேண்டும்” என்று கூறினார்.

சென்னை

# காவிநிற தொப்பியில் குஷ்பு



குஜராத்தில் விரைவில் சட்ட சபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலையொட்டிய பிரசாரத்தை முன்கூட்டியே தொடங்கிய பிரதமர் மோடி, குஜராத்தில் ஊர்வலம் நடத்தினார்.

இந்தப் பிரசாரத்தின் போது, பிரதமர் மோடி தலைப்பாகைக்கு பதிலாக காவி நிற தொப்பி அணிந்திருந்தார். இதையடுத்து குஜராத்தில் பிரசாரம் செய்யும் பாரதிய ஜனதா கட்சியினருக்கு காவி தொப்பி அணியலாம் என்ற யோசனை உதித்தது.

இதற்காக ஒரேவடிவில் சிறப்பு வகை காவி தொப்பி தயாரிக்கப்பட்டது. கட்சியினர் சின்னமான தாமரை இடம்பெற்றுள்ள இந்தத் தொப்பி தொண்டர்களின் அடையாளமாக மாறியுள்ளது.

இந்த நிலையில், பா.ஜனதா கட்சியின் 42வது ஆண்டுவிழா நேற்று (06) கொண்டாடப்பட்டது. இதையொட்டி சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சென்னையில் பா.ஜனதா கட்சி கொடியேற்றும் நிகழ்ச்சி நடந்தது. இதில் நடிகை குஷ்பு பங்கேற்று பா.ஜனதா கொடியை ஏற்றினார். நிகழ்ச்சியில் பங்கேற்ற குஷ்பு காவிநிற தொப்பி அணிந்திருந்தார்.

திருப்பதி

# ‘கலகலப்பு’ படமல்ல உண்மையான சம்பவம்



கொள்ளையடிக்க சென்ற திருடன், ‘கலகலப்பு’ பட பாணியில் ஜன்னலில் சிக்கிக் கொண்ட விநோத சம்பவமொன்று ஆந்திர மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீகாகுளம் ஜாடுபுடியில் எல்லையம்மன் கோவிலில் ஆண்டுதோறும் மார்ச்சில் திருவிழா விமரிசையாக நடைபெறும்.

அப்போது பக்தர்கள் தங்கம், வெள்ளி, பணம் ஆகியவை உண்டியலில் காணிக்கையாக செலுத்துவார்கள்.

இதனை அறிந்து திருடன், கோவிலில் ஜன்னல் கம்பிகளை நீக்கிவிட்டு கோவிலுக்குள் புகுந்தான். பின்னர், கருவறையில் இருந்த அம்மனின் அணியப்பட்டிருந்த தங்கம், வெள்ளி நகைகளை எடுத்துக்கொண்டதுடன் உண்டியலை உடைத்து பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு ஜன்னல் வழியோ வெளியே எடுத்துவர முயற்சித்தான். ஆனால் அவனால் வெளியே வர முடியவில்லை. நீண்ட நேரம் வெளியே வர போராடியதால் களைப்பு ஏற்பட்டு அப்படியே தூங்கி விட்டான்.

வழக்கம்போல் பக்தர்கள் கோவிலுக்கு சென்றனர். அப்போது ஜன்னலில் தொங்கிக்கொண்டிருந்த திருடனை கண்டு அதிர்ச்சி அடைந்து தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த பொலிஸார், மயங்கிய நிலையில் இருந்த திருடனைக் கைதுசெய்தனர்.

ஜெயங்கொண்டம்

# சிறுமி கர்ப்பம்! 13 பேர் கைது

அரியலூர் மாவட்டம்,, உடையார்பாளையம் பகுதியை சேர்ந்தவர் சாந்தா (வயது 30). இவர், 15 வயது சிறுமியை வீட்டு வேலைக்காக கடந்த 3 மாதங்களுக்கு முன்பு அழைத்து சென்றுள்ளார். சிறுமிக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அவரது பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டார்.

சிறுமியை பரிசோதித்த போது, அவர், கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. இதனால், அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர், பொலிஸில் முறைப்பாடு செய்தனர். சாந்தா, அந்த சிறுமியை, சந்திரா (30) என்ற பெண்ணிடம் ஒப்படைத்ததாகவும், அந்த சிறுமிக்கு குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்த சந்திரா, சிலருடன் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதும் தெரியவந்தது.

இதையடுத்து ஆண்கள், பெண்கள், என 13 பேர் கைதுசெய்யப்பட்டனர். இன்னும் சிலரை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (06) சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெற்றது.

# இராணுவ-பொலிஸ் மோதல் உருவாகலாம்



முகத்தை மூடிக் கொண்டு ஆயுதங்களை சுமந்து இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களில் இராணுவத்தினர் வருவது நிலைமையை மேலும் மோசடைய செய்யுமென எச்சரித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார, இவ்வாறு வந்தவர்களே அன்று ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவையும் கொலை செய்தனர் என்றார்.

பாராளுமன்றத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மத்தியில் இலக்க தகடுகள் இல்லாத, முகத்தை மூடிக்கொண்டு இராணுவத்தினர் வந்தனர். இதுபோன்ற குழுவினர் வந்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறிச் செல்லும்போது அவர்களை சுட்டுக்கொலை செய்யலாம். அல்லது போராட்டகாரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தலாம்.

இச்சம்பவத்தால் பொலிஸ், இராணுவத்துக்கு இடையில் மோதல் ஏற்படலாமென சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படுகின்றன. ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். இது பாரதூரமான விடயம். அரச பயங்கரவாதமாக இந்நிலைமையாக மாறலாம் எனவும் மனுச நாணயக்கார எச்சரித்தார்.

எனவே, இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# அவன்கார்ட் ஆயுதங்களால் தாக்குதல்கள் நடத்தலாம்



அவன்கார்ட் சம்பவத்துடன் தொடர்புடைய ஆயுதங்களைக் கொண்டு போராட்டக்காரர்கள் மீது அரசாங்கம் தாக்குதல் நடத்தலாமென எச்சரிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாப்பதற்கே அவசரக்காலச் சட்டம், ஊரடங்கு என்பன நாட்டில் அமல்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கம் எதனை விதைத்ததோ அதனையே அறுவடை செய்கிறது. மிரிஹானயில் பஸ்ஸை எரித்ததை பார்த்தோம். யார் எரித்தார்கள் என்பதை பொலிஸார் கண்டறிந்தனரா? எங்கே அந்த விசாரணைகள்?

பாராளுமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தின்போது முகத்தை மூடிக்கொண்டு இலக்கத்தகடுகள் இல்லாத மோட்டார் சைக்கிள்களில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் வந்தனர். அவன்கார்ட் சம்பவங்களின்போதும் ஆயுதங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று உரசியதில் ஆயுதங்களின் இலக்கங்கள் மறைந்துபோயின எனவும் தெரிவித்தார்.

இந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களில் வரமுடியும்? பொலிஸ் அமைச்சர் இல்லை என்றாலும் பொலிஸார் அரசாங்கத்துக்கு கீழேயே இருக்கிறனர்.

தற்போது அநுரகுமார திஸாநாயக்க தொடர்பில் ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார். முதலில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிபீடம் ஏறுவதற்கு ஜே.வி.பியினரே உழைத்தனர். மஹிந்த ராஜபக்ஷ மீது சுனாமி தொடர்பில் குற்றச்சாட்டுகள் காணப்பட்டபோதும் அப்போது ஜே.வி.பியினர் மஹிந்தவுக்கே ஆதரவு வழங்கினார்கள்.

தற்போதைய ஜனாதிபதியை போல நாட்டில் முன்பிருந்த எந்தவொரு ஜனாதிபதியையும் வீட்டுக்கு செல்ல வேண்டுமென மக்கள் வீதிக்கு இறங்கி போராடவில்லை. நாட்டில் முன்பும் அவசரக்காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் அமல்ப்பட்டு இருந்தன. எனினும் தற்போது ராஜபக்ஷர்களின் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கே இவை அமல்படுத்தப்படுகின்றன. ராஜபக்ஷர்களின் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் பலர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# பிரதமர் பதவி விலகிவிட்டாரா?



புதிதாக நியமிக்கப்பட்ட நிதி அமைச்சர் பதவி விலகியுள்ள நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவி விலகியுள்ளரா? என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சபாநாயகரிடம் வினவினார்.

இன்றைய பாராளுமன்ற அமர்வை எந்த முறையில் முன்னெடுத்து செல்வதென சபாநாயகர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. நாட்டில் காணப்படும் காஸ், எரிபொருள், மின்சாரப் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமரிடம் நான் வாய்மூல விடைக்கான வினாக்களை முன்வைத்திருந்தேன். புதிதாக நியமிக்கப்பட்ட நிதி அமைச்சரும் பதவி விலகியுள்ளார். பாராளுமன்றத்துக்கு நேற்று பிரதமர் வந்திருந்தார். இன்று வரவில்லை. ஒருவேளை பிரதமரும் பதவி விலகிவிட்டாரா? என வினவினார்.

இதற்குப் பதிலளித்த சபைமுதல் தினேஸ் குணவர்தன, இதுபோன்ற போலியான மூடநம்பிக்கையான கதைகளை பாராளுமன்றத்தில் பேசும் அளவுக்குப் பாராளுமன்றம் தரந்தாழ்ந்துவிடவில்லை. கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நாட்டின் நிலைமைகள் தொடர்பில் விவாதிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாய்மூல விடைக்கான வினாக்களை வேறொரு தினத்தில் வினவுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

# பதுக்கிய சொத்துகளை கொண்டு வாருங்கள்



பண்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களின் சொத்துகளை மீள நாட்டுக்குக் கொண்டுவருவதன் ஊடாக, நாட்டில் காணப்படும் டொலர் பிரச்சினையை தீர்க்க முடியும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்கான சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றத்தில் மேற்கொள்ள வேண்டும் எனவும் சஜித் வலியுறுத்தினார்.


எந்தக் காரணங்களுக்காக நாட்டில் அவரசக்காலச் சட்டம் அமல்படுத்தப்பட்டது? தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதா? பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் ஏதும் தகவல்கள் கிடைத்தனவா? என்பதையும் எதற்காக நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறக்கப்பட்டது? எதற்காக சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டன? இதற்கான காரணங்களையும் அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

நாட்டில் நிதி அமைச்சரோ, திறைச் சேரியின் செயலாளரோ இல்லை. இதுவொரு பாரதூரமான விடயம். பாராளுமன்றத்துக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அடையாளம் காணமுடியாத வகையில் முகத்தை மூடிக்கொண்டு, இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் யார்? இவர்கள் யார்? இராணுவத்தினரா? இரகசிய இராணுவத்தினரா எனவும் இதன்போது சஜித் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பாரதூரமான உணவு தட்டுப்பாடு ஏற்படப்போவதாக சபாநாயகரே கூறுகிறார். இதற்கெல்லாம் டொலர் தட்டுப்பாடே காரணமென அரசாங்கம் கூறுகிறது. டொலரை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கான வழியொன்று இருக்கிறது. பண்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களின் சொத்துகளை நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும். இவ்வாறு செய்வதன் ஊடாக டொலர் தட்டுப்பாடு ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

# சபைக்குள் இறங்கி போராட்டம்

## ஒரே நாளில் இரு தடவைகள் ஒத்திவைப்பு



ஜனாதிபதி, அரசாங்கத்தைப் பதவி விலகக்கோரி நாடுதழுவிய போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், சபையிலும் நேற்று போராட்டம் வெடித்தது.

அரசியல் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் பாராளுமன்றம் இரண்டாவது நாளாக நேற்று (06) கூடியபோதும், அமர்வின் ஆரம்பத்திலிருந்து அமர்வு முடியும் வரையில் பாராளுமன்றத்துக்குள் பெரும் பதற்ற நிலையே காணப்பட்டது.

இதனால் பாராளுமன்ற அமர்வு காலை 10.50 மணியிலிருந்து 11 மணிரையிலும் 11.40 இல் இருந்து 11.50 வரை மற்றொரு தடவையும் என இருதடவைகள் சபையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விவாதிப்பதற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய விவாதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வு ஆரம்பமானபோது தினப் பணிகளை முன்னெடுக்க விடாது, உறுப்பினர்கள் பலரும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினர்.

இவ்வாறு நளின் பெர்ணான்டோவும் உரையாற்றிக் கொண்டிருந்தார். பாராளுமன்றத்தின் நேற்றைய விவாதமான நாட்டு நிலைமைகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து விட்டு, அந்த விவாதத்தில் நளின் பெர்ணான்டோ தொடர்ந்து உரையாற்றுமாறு சபாநாயகர் அறிவித்தார்.

எனினும் இதற்கு செவிசாய்க்காது ஏனையோருக்கும் பேசுவதற்கு வழங்கப்பட்ட நேரத்தைபோல எனக்கும் வழங்குங்கள் எனக் கடுமையான தொனியில் நளின் கேட்டுக்கொண்டார். நளின் பெர்ணான்டோவின் செயற்பாடுகள் ஜனநாயகத்துக்கு விரோதமானவை என தெரிவித்து சபநாயகார் சபை அமர்வுகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடியபோது ‘கோ ஹோம் கோட்டா’ என்கிற பதாகைகளுடன் ஐக்கிய மக்கள் சக்தியினர் பாராளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிக் கொண்டிருந்தார். இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சபையின் மத்திய பகுதிக்கு சென்று பந்துலவின் முன்பாக பதாகைகளை காண்பித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் சபைக்கு நடுவே வந்து குழப்பத்தில் ஈடுபட்டதால் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் சபையில் சிறிது நேரம் பதற்றமான நிலை ஏற்பட்டிருந்தது.

உக்ரேன்

குழந்தைகள் கண்முன்னே

# தாய்மார்களுக்கு பாலியல் வன்கொடுமை

உக்ரேனில் குழந்தைகள் கண்முன்னே, தாய்மார்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவதாக அந்நாட்டின் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளமை உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரேன்-ரஷ்யா இடையிலான போரானது 43 ஆவது நாளாக நீடித்து வரும் நிலையில், புச்சா நகரில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களை ரஷ்ய இராணுவம் சித்திரவதை செய்து கொலை செய்துள்ளதாகப் பல குற்றசாட்டுகளை உக்ரேன் முன்வைத்து வருகின்றது.

மேலும், ரஷ்ய படையால் உக்ரேன் பெண்கள், சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.





இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, "உக்ரேனிய தாய்மார்களை, அவர்களின் குழந்தைகள் முன்னிலையில் ரஷ்ய துருப்புகள் பாலியல் பலாத்காரம் செய்து வருகின்றனர். ஆகவே, விளாடிமிர் புடினை போர்க் குற்றவாளி என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்க வேண்டும். குடும்பங்களை முழுமையாக கொன்று எரிக்க, ரஷ்ய வீரர்கள் முயற்சி செய்துள்ளனர். மேலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் குடிமக்கள் கொடூரமாக கொல்லப்பட்டனர், கை கால்கள் வெட்டப்பட்டு, கழுத்து அறுக்கப்பட்டு நரக வேதனையை அனுபவித்தனர்.

அதுமட்டிமின்றி, பல பேரின் நாக்குகள் வெட்டப்பட்டன; ஏனென்றால் அவர்கள் பேசுவதை ரஷ்ய வீரர்கள் கேட்க விரும்பவில்லை" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ள கருத்துகள், சர்வதேச நாடுகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

ஐ.பி.எல்:


# ராஜஸ்தானை வென்ற பெங்களூர்

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரின் அணித்தலைவர் பப் டு பிளெஸி, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், ஆரம்பத்திலேயே யஷஸ்வி ஜைஸ்வாலை டேவிட் வில்லியிடம் இழந்தபோதும், தேவ்டுட் படிக்கலின் 37 (29) ஓட்டங்கள் மூலம் இனிங்ஸை நகர்த்தியது. பின்னர் குறிப்பிட்ட இடைவெளிகளில் படிக்கல்லும், அணித்தலைவர் சஞ்சு சாம்ஸனும் ஹர்ஷால் பட்டேல், வனிடு ஹஸரங்கவிடம் வீழ்ந்தனர்.

இந்நிலையில், பட்லரின் ஆட்டமிழக்காத 70 (47),



ஷிம்ரோன் ஹெட்மயரின் ஆட்டமிழக்காத 42 (31) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களை ராஜஸ்தான் பெற்றது. பந்துவீச்சில், ஹர்ஷால் பட்டேல் 4-0-18-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 170 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பெங்களூர், டு பிளெஸியின் 29 (20), அனுஜ் ராவட்டின் 26 (25) ஓட்டங்கள் மூலம் நிதானமஆன ஆரம்பத்தைப் பெற்றபோதும், இவர்கள் இருவரையும், விராட் கோலி, டேவிட் வில்லி, ஷெர்ஃபேர் ருதஃபோர்ட்டை வரிசையாக யுஸ்வேந்திர சஹால் (2), நவ்தீப் சைனி, ட்ரெண்ட் போல்டிடம் இழந்தது.

இந்நிலையில், ஷபாஸ் அஹ்மட்டின் 45 (26), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 44 (23) ஓட்டங்களோடு 19.1 ஓவர்களில் வெற்றியிலக்கை பெங்களூர் அடைந்தது. பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 4-0-15-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக தினேஷ் கார்த்திக் தெரிவானார்.

அந்தவகையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும், டெல்லி கப்பிட்டல்ஸும் மோதவுள்ளன.

சீனா

# கைதிகளின் இதயம் அறுத்தெடுப்பு

சீனாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் இதயம், அவர்கள் உயிருடன் உள்ளபோதே வெட்டி எடுக்கப்படுவதாக வெளியாகியுள்ள செய்தியானது உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவிலுள்ள ஒரு பல்கலைக்கழக அமைப்பு நடத்திய ஆய்விலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த ஆய்வில், சீனாவின் நீதித் துறையின் சார்பில் மருத்துவர்களே கைதிகளது இதயத்தை நீக்கி, மரண தண்டனை நிறைவேற்றுவதாகவும், மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ள கைதிகளின்






இதயத்தை, அவர்கள் உயிருடன் உள்ளபோதே மருத்துவர்கள் வெட்டி எடுத்துவிடுவதாகவும், பின்னர் அவற்றை தானமாக வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை சுமார் 56 மருத்துவமனைகளில் கைதிகள் 71 பேருக்கு இதயம் அகற்றப்பட்ட நிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒற்றை இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# பாகிஸ்தானை வீழ்த்திய அவுஸ்திரேலியா




பாகிஸ்தானின் லாகூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான ஒற்றை இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

பாகிஸ்தான்: 162/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 66 (46), உஸ்மான் குவாதிர் ஆ.இ 18 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: நாதன் எலிஸ் 4/28 [4], கமரொன் கிறீன் 2/16 [3], ஷோன் அபொட் 1/28 [4], அடம் ஸாம்பா 1/29 [4])

அவுஸ்திரேலியா: 163/7 (19.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஆரோன் பின்ஞ் 55 (45), ட்ரெவிஸ் ஹெட் 26 (14), ஜொஷ் இங்லிஸ் 24 (15), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 23 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 2/21 [4], மொஹமட் வாஸிம் 2/30 [4], உஸ்மான் குவாதிர் 2/33 [4])

போட்டியின் நாயகன்: ஆரோன் பின்ஞ்

சம்பியன்ஸ் லீக்:

# அத்லெட்டிகோவை வென்ற சிற்றி

சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை கெவின் டி ப்ரூனே பெற்றிருந்தார்.



சிங்கப்பூர்




# முன்னிலையில் ஜப்பான், சிங்கப்பூர்

உலக அளவில் சக்திவாய்ந்த கடவுச் சீட்டுகளை உடைய நாடுகளின் பட்டியலில் ஜப்பானும் சிங்கப்பூரும் தொடர்ந்தும் முதலாவது இடத்தைத் தக்கவைத்துள்ளன.

ஒரு நாட்டின் கடவுச் சீட்டினை வைத்து, எத்தனை நாடுகளுக்கு விசா இன்றிப் பயணிக்கலாம் என்பது உள்ளிட்ட சில விடயங்களின் அடிப்படையில், சக்தி வாய்ந்த கடவுச் சீட்டினை உடைய நாடு எது என்பது தீர்மானிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், 192 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணிக்கலாம் என்பதால், அவை முதலிடத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 190 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்கலாம் என்பதால் ஜேர்மனி, தென்கொரியா 2ஆவது இடத்திலும், பின்லாந்து, இத்தாலி, லக்ஸம்பர்க், ஸ்பெயின் போன்ற நாடுகள் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. குறித்த நாடுகளின் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் 189 நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளலாம்.

மேலும், ஆரம்பத்தில் 6ஆவது இடத்தில் இருந்த பிரித்தானியா தற்போது 5 ஆவது இடத்திற்கும், 5 ஆவது இடத்தில் இருந்த அமெரிக்கா 6 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்து வரும் போர் காரணமாக, உக்ரேன் 34ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளதோடு, 46ஆவது இடத்தில் இருந்த ரஷ்யா 49ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

மேலும் இப் பட்டியலில் இலங்கை 103 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் இறுதி இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா


திருடப்பட்ட குறிப்பேடுகள்

# 22 ஆண்டுகள் கழித்து நூலகம் திரும்பின

பிரித்தானியாவில் 22 ஆண்டுகளுக்கு முன்னர் திருடப்பட்ட சார்லஸ் டார்வினின் இரண்டு குறிப்பேடுகள், மீண்டும் திருட்டுப் போன நூலகத்திலேயே விட்டுச் செல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மனித குல பரிணாம வளர்ச்சி குறித்து அறிஞர் சார்லஸ் டார்வின் 185 ஆண்டுகளுக்கு முன்னர் தனது கைப்பட எழுதிய 2 ஆய்வுக்குறிப்பேடுகள் பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

எனினும் கடந்த 2000ஆம் ஆண்டு புகைப்படம் எடுப்பதற்காகப் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்து அவை எடுக்கப்பட்ட போது, மர்ம



நபர்களால் அக் குறிப்பேடு திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மையில் மர்ம நபர் ஒருவர், ஈஸ்டர் வாழ்த்துச்செய்தியுடன் அந்த இரு குறிப்பேடுகளையும் பரிசுப் பெட்டியில் வைத்து நூலகத்தில் விட்டுச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி

# சிறுவர் ஆபாசப்படங்கள் விநியோகித்தல் அதிகரிப்பு

ஜேர்மனியில் சிறுவர் ஆபாச படங்களின் விநியோகம் அதிகரித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் 2020 ஆம் ஆண்டை விட 2021ஆம் ஆண்டில் 108.8 % சிறுவர் ஆபாச பட விநியோகம் அதிகரித்திருப்பதாக அந்நாட்டின் வருடாந்த குற்ற புள்ளி விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜேர்மனியின் உட்துறை அமைச்சர் நான்சி ஃபேசர், "பயங்கரமாக அதிகரித்திருக்கும் சிறுவர்

**"ஜேர்மனியில் 2020 ஆம் ஆண்டை விட 2021ஆம் ஆண்டில் 108.8 % சிறுவர் ஆபாச பட விநியோகம் அதிகரித்து உள்ளதாக குற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது**

பாலியல் குற்றங்களை தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள, எனக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜேர்மனியில் 2017 ஆம் ஆண்டிலிருந்து குற்றங்கள் குறைந்திருப்பதாகவும் குறிப்பாக வன்முறை, குற்றங்கள் 6.8 சதவீதம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் வெற்றிக் கிண்ணத் தொடர்:

# சம்பியனானது நியூ ஸ்டார்ஸ்

நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் நடைபெற்ற ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் வெற்றிக் கிண்ணம் 2022-இன் சம்பியனாக அட்டாளைச்சேனை நியூ ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவானது.

அணிக்கு எட்டுப் பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடராக நடைபெற்ற இத்தொடரில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 22 அணிகள் கலந்துகொண்ட நிலையில், இறுதிப் போட்டியில் சாய்ந்தமருந்து றெட் மக்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே நியூ ஸ்டார்ஸ் சம்பியனானது.

சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம், ஐந்து ஓவர்களில் 54 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 55 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றெட் மக்ஸ் விளையாட்டுக் கழகம், ஐந்து ஓவர்களில் 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியைச் சந்தித்தனர்.

இத்தொடரின் நாயகனாக, 4 விக்கெட்டுகளை வீழ்த்தி 71 ஓட்டங்களை பெற்ற ரஸா தெரிவானார். இறுதிப்






போட்டியின் நாயகனாக நியூ ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழக வீரர் அப்ராஸும், தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக ஷமீர், துடுப்பாட்ட வீரராக ரஸா, களத்தடுப்பாளராக நக்மல் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு பாராட்டப்பட்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 07 ஏப்ரல் 2022, இல. 08, ஹுனுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.